# எதனாலே? எதனாலே?

எதனாலே? எதனாலே?
எதனால் எதனால் எதனாலே?
வானத்தில் வானவில் எதனாலே
நட்சத்திரம் மின்னுவது எதனாலே?
தும்பைப்பூ எதனால் வெளுத்திருக்கு
ரோஜாப்பூ எதனால் சிவந்திருக்கு
மின்மினிப் பூச்சியின் பின்னால் அடிக்கடி
விளக்கொண்ணு மின்னுவது எதனாலே

(எதனாலே)

குருவியும் காக்கையும் பறப்பதைப் போலவே
பூனை பறக்கலே எதனாலே?
குட்டி அணிலும் சின்னப் புறாவும்
கொஞ்சி சிரிப்பதைப் போலவே மாம்பழம்
கைகொட்டிச் சிரிக்கலே எதனாலே?

(எதனாலே)

தூரத்து மலையின் மரத்தையெல்லாம்
திருடர்கள் வெட்டுவது எதனாலே?
கொஞ்சி சிரிக்கும் தம்பியும் பாப்பாவும்
இன்னும் அழுவது எதனாலே?
குப்பனும் குட்டித் தங்கையும் அம்மாவும்
பிச்சை எடுப்பது எதனாலே?

(எதனாலே)

ரொட்டியும் மருந்தும் வாங்கிடும் காசினால்
அணுகுண்டு செய்வது எதனாலே?
சாதி மதங்களின் வேக்குள்ளே நாம்
சிக்கித் தவிப்பது எதனாலே?
பட்டினி எதனாலே?
வறுமை எதனாலே?
அறியாமை எதனாலே?

எதனால் எதனால் எதனால் என்று
கேள்வி கேட்கும் நேரம் வந்தாச்சு
எங்கெங்கே அநீதிகள் தலைவிரித்தாடுதோ
அங்கங்கே அங்கங்கே அஞ்சாமல் நின்று
நெஞ்சும் தலையும் நிமிர்த்தி உயர்த்தி
எதனால் எதனால் எதனால் என்று
கேள்வியை நீயும் உரக்கக் கேளு
எதனாலே? எதனாலே?? எதனாலே???



Scanned by CamScanner